# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் விசேட ஸ்கான் இயந்திரம் மூலம் ஆராயவுள்ளதாக தகவல்

## இதுவரை 19 எலும்புகூட்டுத் தொகுதிகள் முழுமையாகக் கிடைத்தன



முல்லைத்தீவுகொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின்அகழ்வுப்பணி மீள ஆரம்பிக்கப்பட்டு இன்றையதினம்மூன்றாவது நாளாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிசார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன்தொல்லியல்பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்றையதினம் அகழ்வாய்வு நிறை வடையும்போது இரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது,குறித்தஎலும்புக்கூட்டு உடற்பகுதியில் இருந்து துப்பாக்கிச் சன்னங்கள், குண்டுச் சிதறல்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் இலக்கத் தகடு ஆகியன எடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை களனிப் பல்கலைக்கழக தொல்பொருள் பீடத்தினரால் விசேட ஸ்கான் இயந்திரம் மூலம் இந்த மனிதப்புதைகுழியானது வியாபித்து இருக்கக்கூடிய தூரம் உள்ளிட்ட பலவிடயங்கள் குறித்து ஆய்வு நடத்தப்படவுள்ளதாக முல்லைத்தீவு 2


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 06 புதன்கிழமை 22.11.2023 கதிர் 118



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!

A new brand from Jaffna!

பூ ஆடை

PooAadai

ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## வட்டுக்கோட்டை இளைஞனின் உயிரிழப்பு சிறைச்சாலைக்குச் சென்று வாக்கு மூலம்

### யாழ் நீதவான் நீதிமன்ற நீதவான் பெற்றார்

வட்டுக்கோட்டை இளைஞன் மரணம் தொடர்பாக யாழ் நீதவான் நீதிமன்ற நீதவான் சிறைச்சாலைக்கு நேரில் சென்று வாக்கு மூலங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, உயிரிழந்த இளைஞனுடன் கைது செய்யப்பட்ட மற்றைய இளைஞனிடமும் வாக்கு மூலம் பெற்றுக்கொள்வதற்காக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு இளைஞனுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சித்தங்கேணிப் பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் பொலிசாரின் சித்தரவதை காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இளைஞனின் உயிரிழப்பு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இடம் பெற்றமையால், அது தொடர்பிலான விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்று வருகின்றன.

இளைஞனின் உடற்கூற்றுப் பரிசோதனைகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் யாழ்.போதனா வைத்தியசாலையில், சட்ட வைத்திய அதிகாரி உ.மயூரதன் மேற்கொண்ட போது, நீதவான் வைத்தியசாலைக்கு நேரில் சென்று சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து சிறைச்சாலைக்கு நேரில் சென்று சிறைச்சாலை அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களிடம் வாக்கு மூலங்களையும் பெற்றுக்கொண்டார்.

உயிரிழந்த இளைஞனின் குடும்பத்தினர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி.திருக்குமரன், சட்டத்தரணி ரிஷிகேசவன், மற்றும் சட்டத்தரணி மயூரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞன் 2

## மாவீரர் வார இரண்டாம் நாள் நிகழ்வு





மாவீரர் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று கிளிநொச்சி மாவட்டத்தின் சுண்டிக்குளம் சந்திப்பில் நடைபெற்றது.

மாவீரர் பெற்றோரும் உரித்துடையோரும் வாத்திய இசையுடன் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டு அழைத்துவரப்பட்டு, மலர் வணக்கம் இடம்பெற்றது.

மாவீரர்களது பெற்றேருக்கு மாவீரர் நினைவாக மரக்கன்றுகளும் நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (04)

## மற்றுமொரு சீனக் கப்பல் ஜனவரியில் இலங்கை வர அனுமதி கோருகின்றது

எதிர்வரும் ஜனவரி மாதம் மற்றுமொரு சீன ஆய்வுக் கப்பலை இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்க அனுமதிக்குமாறு இலங்கைக்கான சீனத் தூதரகம் வெளிவிவகார அமைச்சிடம் 2

## இளைஞனின் மரணம் இதயத்தை வருத்துகிறது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவலை

கடுமையான குற்றவாளிகள் கூட நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சிறையிருந்து வருகிற நிலையில் சந்தேகத்தின் பேரில் கைதான சித்தங்கேணி இளைஞன் நாகராஜா அலெக்ஸ்

மரணமான செய்தி எல்லோர் இதயங்களையும் வருத்துகின்றது, என ஈழ மக்கள் ஜனநாயக்கட்சியின் செயலாளர் நாயகமும் 2

## ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் அடுத்த வருடம் நிச்சயம் நடத்துவேன்

### சபையில் ஜனாதிபதி வாக்குறுதி



ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு நிச்சயம் நடத்துவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் இன்று உறுதியளித்துள்ளார்.

அத்துடன் அதனை தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவேன் 2

## 19 வயது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கையிலிருந்து மாற்றப்பட்ட விவகாரம்

### விளக்கம் கோரவேண்டும்! - சஜித் வலியுறுத்து



இலங்கையில் நடைபெறவிருந்த 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர், தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்ட விவகாரம் தொடர்பாக ஐ.சி.சி.யிடமும் இலங்கை கிரிக்கெட் சபையிடமும் ஜனாதிபதி உரிய விளக்கத்தைக் கோர வேண்டும், என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில்இன்றுஉரையாற்றிய அவர், இலங்கையில் நடைபெறவிருந்த 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர், தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

எமது நாட்டின் கிரிக்கெட் 2

# ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை! எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ



ஆசியக் கிண்ண கிரிக்கட் போட்டியின் பின்னர் கிரிக்கெட் மைதான ஊழியர்களுக்கு வழங்குவதற்காக ஆசியக் கிரிக்கட் பேரவையினால் வழங்கப்பட்ட 50,000 அமெரிக்க டொலர் தொகை இதுவரை அந்த ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் இன்று நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து உரிய தொகையை ஊழியர்களுக்கு வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (04)

# உடன் அமுலுக்கு வரும் வகையில் விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு

இலங்கை புகையிலை நிறுவனத்தினால் (CTC) விநியோகிக்கப்படும் மூன்று வகையான சிகரெட்களின் விற்பனை உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, Dunhill Switch> Dunhill Double Capsule kw;Wk; John Player Gold Pro Cool ஆகிய சிகரெட் விற்பனை கடந்த 17 ஆம் திகதி முதல் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சிகரெட்டுகளின் விற்பனையை உடனடியாக நிறுத்துமாறும், கடைகளில் வாடிக்கையாளர்களுக்கு இந்த சிகரெட் பாக்கெட்டுகளை காட்சிப்படுத்தினால் அவற்றை அகற்றுமாறும் சில்லறை விற்பனையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(04)

## கொக்குத்தொடுவாய் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட விசேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் 15 வரை இடம்பெற்றிருந்தன.

இவ்வகழ்வுப் பணியில் 17 எலும்புக்கூட்டுத் தொகுதிகளும், துப்பாக்கிச் சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்கத்தகடுகள், உடைகள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களும் மீட்கப்பட்டிருந்த நிலையில் குறித்த அகழ்வு பணி யானது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து, நேற்று முன்தினம் (20) மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(04)

## 19 வயது உலகக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகத்தில் காணப்படும் குழப்பங்களே இதற்குக் காரணம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நாட்டில் நடைபெற்ற ஐ.சி.சி.யின் 5 கிரிக்கெட் தொடர்களும் இடைக்காலக் கட்டுப்பாட்டுக் குழுவின்நிர்வாகத்தின் கீழ்தான் இடம்பெற்றுள்ளன.

அந்தவகையில், 2000 ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணத் தொடர், 2002 ஆம் ஆண்டு சம்பியன் கிண்ணத் தொடர், 2006 ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ணத் தொடர், 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடர், 2012 ஆம் ஆண்டு ரி-20 உலகக் கிண்ணத் தொடர் என்பன இடைக்காலக் கட்டுப்பாட்டுக் குழு நிர்வாகத்தின் கீழ்தான் நாட்டில் இடம்பெற்றன.

எனவே, விளையாட்டுத் துறை அமைச்சரும் ஜனாதிபதியும் இது தொடர்பாகக் கேள்வி எழுப்ப வேண்டும்.

இலங்கைக் கிரிக்கெட் சபையிடமும் ஐ.சி.சியிடமும் இது தொடர்பான விளக்கத்தைக் கோர வேண்டும், என வலியுறுத்தினார்.

எப்படி இந்தத் தரப்பினர் தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, எமது நாட்டில் நடைபெறவிருந்த தொடரை தென்னாபிரிக்காவுக்கு மாற்ற முடியும்? எனக் கேள்வியும் எழுப்பினார்.

அத்தோடு, இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் உள்ளிட்ட நிர்வாகக் குழுவினர், இதன் ஊடாக தேசத்துரோகச் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளார்கள்.

இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (04)

## இளைஞனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில், சந்தேகத்தின் பேரில் கைதான ஒருவர் முழுமையான நீதி விசாரணைக்கு முன்பாகவே மரணத்தைத் தழுவியுள்ளார். இது நடந்திருக்கவே கூடாத கொடிய துயர் நிகழ்வு.

இது குறித்த விசாரணைகள் நடந்து வருகின்றன. உண்மைகள் கண்டறியப்பட்டு

நியாயங்கள் உணர்த்தப்பட வேண்டும்.

மரணமடைந்த இளைஞனின் குடும்பத்தவர்கள்படும் இழப்பின் வலிகளில் பங்கெடுக்கின்றேன். ஆறுதலும், ஆழ்மன அஞ்சலியும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

## மற்றுமொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்துள்ளது. இந்தியாவினால் எழுப்பப்பட்ட பாதுகாப்புச் சந்தேகங்களையும் மீறி, இலங்கைக் கடற்பரப்பிற்குள் அனுமதிக்கப்பட்ட சீன ஆய்வுக்கப்பலான ஷியான் 6, இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசித்து ஒரு மாதம் நிறைவடைவதற்கு முன்னரே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடல்சார் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள சியாங் யங் ஹொங் 3 என்ற கப்பலையே இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி 5 முதல் பெப்ரவரி 20 வரையிலான காலப்பகுதியிலேயே இக்கப்பல் இலங்கைக்கான பயணத்திற்கு அனுமதி கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெந-37)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். இதேவேளை, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக வாக்களித்த 122 பேருக்கும், எதிராக வாக்களித்த 77 பேருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## வட்டுக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அவரது நண்பரான மற்றைய இளைஞன் ஆகியோர் நகைத் திருட்டுக் குற்றச்சாட்டினடிப்படையில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, அவர்கள் இருக்குமிடம் தெரிந்திராத நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கமைய இருவரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பொலிசார் முற்படுத்தியிருந்தனர்.

அப்போது இருவரையும் மன்று விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதைத் தொடர்ந்து இருவரும் யாழ்ப்பாணச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களில் அலெக்ஸ் எனும் இளைஞன் உயிரிழந்தார்.

மற்றைய இளைஞன் தொடர்ந்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நிலையில் நேற்றைய தினம் நீதிமன்றம் அவரைப் பிணையில் செல்ல அனுமதித்தது. (01)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# தேசிய மட்டப் பரதநாட்டியக் குழு நடனம் புலியாட்டம் புரிந்த இந்துவுக்கு முதலிடம்



அனுராதபுரத்தில் நடைபெற்ற தேசிய மட்ட பரத நாட்டியக் குழு நடனப் போட்டியில் புலியாட்டம் எனும் தலைப்பில் பங்குகொண்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

9,10,11 பிரிவுகளைச் சேர்ந்த சி.கேசிகன், சு.வர்ஜிகன், வா.மேகவன், ரா.பிரகாஷ், இ.கௌதமன், ரீ.ஹருணிஷாந், ந.சிபிநயன், கீ.சானுகன், கு.ஜதுர்சயன், ஐ.மதுசாதனன் ஆகிய மாணவர்கள் இந்த நடனக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

நடன நெறியாள்கையை ஆதித்யா ஜெயபாலன், பிரியதர்ஷினி வாகீசன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

அணிசேர் கலைஞர்களாக, நட்டுவாங்கம் - பிரியதர்ஷினி வாகீசன், குரலிசை- க.ரஜீவன், சு. வடிவாம்பிகை, மிருதங்கம் - க.திவ்யாசாகர் (12டி), ஹார்மோனியம் - து.பிரசன்னன் (2022 உ-த) ஆகியோர் பங்கெடுத்திருந்தனர். (04)







# யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியில் சிறப்புற நடைபெற்ற முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழா காலை மற்றும் மாலை இரண்டு அமர்வுகளாக கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமாநந்தம் தலைமையில் நடைபெற்றது.

காலை அமர்வு பேராசிரியர் கா.சிவத்தம்பி அரங்கு எனவும், மாலை அரங்கு நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அரங்கு எனவும் பெயரிடப்பட்டிருந்தன.

காலை அமர்வில் பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தகைசார் வாழ்நாள் பேராசிரியர் வ மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், இலங்கை வங்கி யாழ்ப்பாண இரண்டாம் கிளையின் முகாமையாளர் எ.சந்தனுவும் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக வலிகிழக்கு பிரதேசசபையின் செயலாளர் இ.பகிரதன், நீர்வேலி பவானி களஞ்சிய உரிமையாளர் பொன்னையா கிருஷ்ணானந்தனும் கலந்து கொண்டனர்.

மாலை அமர்விற்கு பிரதம விருந்தினராக தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித்துறை விரிவுரையாளர் கலாநிதி க.ரகுபரனும் சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி சி. சிவன்சுதன், கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் விக்னேஸ்வரி நரேந்நிரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன், முன்னாள் ஆசிரிய மாணவி காயத்திரி அகிலன் கலந்து சிறப்பித்தார்.

இவ்விழாவில் மாணவ ஆசிரியர்கள் முத்தமிழின் இயல், இசை, நாடகம் ஆகியவற்றில் ஆற்றுகைகளை வெளிப்படுத்தினர்.

மாணவ ஆசிரியர்களுக்கு தமிழ் மொழிசார்ந்த போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிகளை பெருமளவில் மாணவ ஆசிரியர்களும் பொதுமக்களும் பார்வையிட்டனர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக தமிழ் தந்த தாமோதரம் பிள்ளை என்கின்ற வரலாற்று நூல் அதன் ஆசிரியரும் தமிழ்மன்றக் காப்பாளருமான பாலசிங்கம் பாலகணேசனால் வெளியிடப்பட்டது.

# மல்வத்தையில் ஆயுள்வேத வைத்தியசாலை மருந்தகம் ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது



(வி.ரி.சகாதேவராஜா)

மல்வத்தையில் ஆயுள்வேத வைத்தியசாலை மருந்தகம் அண்மையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண ஆயுள்வேத திணைக்களம் ஏறக்குறைய 14,000,000. (ஒருகோடி நாட்பது லட்சம்) ரூபாவை ஒதுக்கீடு செய்து மல்வத்தை ஆயுர்வேத மத்திய மருந்தகம் அமைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.முரளீதரன் தலைமையில் இத்திறப்பு விழா இடம்பெற்றது.

முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உப தவிசாளரும் சு.கட்சி அமைப்பாளருமான வெ.ஜெயச்சந்திரன், மல்வத்தை மக்கள் ஒன்றியத் தலைவர் பொன்.நடராஜா உள்ளிட்ட பல பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள்.



# காஸாவில் நான்கு நாட்கள் போர் நிறுத்தம் பிணைக் கைதிகளை விடுவிக்க இணக்கம்

## காஸா மீதான தாக்குதலை 4 நாட்களுக்கு நிறுத்துவதாக இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.

காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது சுமார் 5,000 ஏவுகணைகளை சரமாரியாக வீசி கடந்த மாதம் 7 ஆம் திகதி தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர், அந்த நாட்டுக்குள் அதிரடியாக ஊடுருவி சுமார் 1,200 பேரைக் கொலை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதில் மிகப் பெரும்பான்மையானவர்கள் பொதுமக்கள் என்றும் கூறப்பட்டது.

அத்துடன், 200 க்கும் மேற்பட்ட பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், ராணுவத்தினரை ஹமாஸ் அமைப்பினர் காஸாவுக்குள் கடத்திச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட இஸ்ரேல் அரசு சூளுரைத்தது. அதற்காக காஸா பகுதியை ஒரு மாதத்துக்கும் மேல் முற்றுகையிட்டு மிகக் கடுமையாக குண்டு வீச்சு நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம், தரைவழியாகவும் காஸாவுக்குள் நுழைந்து தாக்குல் நடத்தி வருகிறது.

இஸ்ரேலின் தாக்குதலில் ஹமாஸ் படையினர், பாலஸ்தீன மக்கள் உள்பட 13,300 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சூழலில், ஹமாஸ் படையினர் கடத்திச் சென்ற பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தையை கட்டார் நாட்டின் தலைமையில் இஸ்ரேல் மேற்கொண்டது.

இந்தப் பேச்சுவார்த்தையில் ஹமாஸ் படையினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இதுகுறித்து இஸ்ரேல் அரசு வெளியிட்ட தகவலில், பிணைக் கைதிகளை மீண்டும் தாயகம் அழைத்துவர இஸ்ரேல் கடமைப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இன்று இரவு முதல் 4 நாட்களுக்குள் பெண்கள், குழந்தைகள் உள்பட 50 பிணைக் கைதிகளை ஹமாஸ் படையினர் விடுவிக்கவுள்ளனர். அதுவரை காஸா மீதான தாக்குதல் நிறுத்தப்படும்.

மேலும், நான்கு நாட்களுக்குப் பின்னர், மேலதிகமாக விடுவிக்கப்பட்டும் ஒவ்வொரு 10 பிணைக் கைதிகளுக்கும் ஒருநாள் போர் நிறுத்தம் செய்யப்படும். அதேசமயம், அனைத்துப் பிணைக் கைதிகளையும் திரும்பப் பெறவும், இஸ்ரேலுக்கு எதிர்காலத்திலும் பிரச்சினை ஏற்படாமல் இருக்கவும் ஹமாஸ் படையினரை ஒழிக்க மீண்டும் போர் தொடங்கும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# ஹவாய் கடற்படைத் தளத்தின் அருகே கடலில் விழுந்தது ராணுவ விமானம்



ஹவாயின் கடற்படைத் தளத்தின் அருகே ராணுவ விமானம் ஒன்று தரையிறங்கும்போது திடீரென பாதைமாறி ஓடுதளத்தைத் தாண்டிச் சென்று கடலில் விழுந்துள்ளது.

விமானத்தில் இருந்த ஒன்பது வீரர்களும் கடலில் நீந்தி பாதுகாப்பாகக் கரைக்கு திரும்பியதாகவும், அவர்களுக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹவாய் தீவுகளில் உள்ள விமானப்படைத் தளத்தில் ராணுவ விமானம் தரையிறங்கியபோது திடீரென பாதைமாறி ஓடுதளத்தை தாண்டிச் சென்று கடலில் பாய்ந்துள்ளது. கடற்கரைக்கு அருகிலேயே விமானம் விழுந்ததால் அது மூழ்காமல் தப்பியுள்ளது.

இந்த விபத்திற்கான காரணம் குறித்து இன்னும் தெரியவில்லை என்றும், இதுபற்றிய விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாககவும் கூறப்படுகிறது.

ராணுவ கண்காணிப்பிற்காக இந்த பி8 போஸேடான் விமானம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 737 ஜெட் விமானங்களைப் போன்றே வடிவமைப்புக் கொண்ட இந்த விமானங்களை போயிங் நிறுவனம் தயாரித்து வருகிறது.

மோசமான வானிலை மற்றும் மிகச்சிறிய ஓடுதளம் ஆகியவை இந்த விபத்துக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்று விமான வல்லுநர் பீட்டர் போர்மன் என்பவர் தெரிவித்துள்ளார்.

மேலும் விமானி விமானத்தை இறக்கத் தொடங்கியிருக்க வேண்டிய இடத்தைத் தவற விட்டிருக்கலாம். இவை அனைத்தும் சேர்ந்து இந்த விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

# ‘லஷ்கர்-ஏ-தொய்பா’ பயங்கரவாத அமைப்பு மீண்டும் உறுதிப்படுத்தி இஸ்ரேல் அறிக்கை

மும்பையில் பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய பாகிஸ்தானைச் சேர்ந்த ‘லஷ்கர்-ஏ-தொய்பா’ பயங்கரவாத அமைப்புத்தான் என்று மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

‘ஹமாஸ்’ ஆயுதக்குழுவினரைப் பயங்கரவாத அமைப்பாக இந்தியா அறிவிக்க வேண்டும் என இஸ்ரேல் அரசு கடந்த சில வாரங்களாகக் கோரிக்கை விடுத்துவரும் நிலையில் இந்த அறிவிப்பை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது.

மும்பையில் கடந்த 2008, நவம்பர் 26 இல் லஷ்கர்-ஏ-தொய்பா நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் யூதர்கள் உள்பட 166 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் நடைபெற்று 15 ஆண்டுகள் நிறைவுறும் நிலையில் இந்தியாவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், ‘மும்பை பயங்கரவாதத் தாக்குலுக்குக் காரணமான லஷ்கர்-ஏ-தொய்பாவை பயங்கரவாத அமைப்பாக இஸ்ரேல் அறிவிக்கிறது. இஸ்ரேலுக்கு எதிராக அதன் எல்லையிலோ அல்லது நாட்டிற்குள்ளேயோ செயல்படும் அமைப்புகளை மட்டுமே பயங்கரவாத



அமைப்பாக அரசு அறிவிக்கும். இதைத் தவிர்த்து, ஐ.நா மற்றும் அமெரிக்காவால் பயங்கரவாத அமைப்பாக கருதப்படும் அமைப்புகளை மட்டுமே இஸ்ரேல் இவ்வாறு அறிவிக்கும்.

ஆனாலும், சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை ஒழிக்கும் முயற்சியாக இந்த முன்னெடுப்பை இஸ்ரேலின் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு அமைச்சகம் எடுத்துள்ளது, எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# காஸாவில் 22 லட்சம் பேருக்கு உணவு தேவை ஐக்கிய நாடுகள் உணவு அமைப்பு தெரிவிப்பு

காஸாவுக்குள் நுழைந்த இஸ்ரேல் ராணுவம் படிப்படியாக உள்நுழைந்து தீவிர தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. இதனால் காஸா நகரம் உருக்குலைந்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் மருத்துவமனைகளுக்குக் கீழாக சுரங்கங்களை அமைத்துப் பதுங்கியிருப்பதாகத் தெரிவித்து, காஸா நகரத்தில் உள்ள மருத்துவமனைகளைக் குறிவைத்து இஸ்ரேல் ராணுவம் தற்போது தாக்குதல் மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே 4 நாட்களுக்குத் தற்காலிகப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

காஸா நிலைவரம் குறித்து தொடர்ந்து ஐக்கிய நாடுகள் அவை கவலை தெரிவித்து வரும் நிலையில் ஐ.நா. உணவு அமைப்பு, காஸாவில் தற்போது 22 லட்சம் பேருக்கு உணவு தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் அங்கு மக்கள் உணவு, எரிபொருள்கள் இன்றித் தவிப்பதாகவும்



அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவ்வமைப்பு கூறியுள்ளது. (04)

# அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் யாழ் இந்துவுக்கு பல பிரிவுகளில் முதலிடங்கள்!





கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் தனிவாத்தியம் - வயலின் ஆண்கள் பிரிவிலும், இசைநாடகப் பாடல் - ஆண்கள் பிரிவிலும், பல்லியம் - ஆண்கள் பிரிவிலும் தேசிய மட்டத்தில் முதலிடங்களைப் பெற்றனர்.

தனிவாத்தியம் - வயலின் ஆண்கள் பிரிவில் வயலின் - செல்வன். ரமணா. லயசர்மா, பக்கவாத்தியம் ந.ஜனகன், நெறியாள்கை - திருமதி. பா.அ.சியாமளா, திரு. க.அருளானந்தகுமார்.

இசைநாடகப் பாடல் ஆண்கள் பிரிவில் பங்குபற்றியோர் தி.திருவர்த்தனன், இ.துவாரகன், த.அக்சயன் , சூ.இசைவாணன், க.வர்சிகன், லோ.சங்கவன், லோ.மாதங்கன், வா.மேகவன்.

இதற்கான நெறியாள்கையை திரு.நா. விமலநாதன், திருமதி. பி. சபேசினி, திருமதி. ஜ. வினித்தா ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

பல்லியம் ஆண்கள் பிரிவில் பங்குபற்றிய மாணவர்கள் ர.லயசர்மா, கௌ.அரோசன், ந.ஜனகன், ப.அகரன், கா.பவிசான், கு.நுகேஷ், ந.சோபவித்யன், க.திவாசவன், கௌ.கஜதேசன், ர.காணாம்ருதசர்மா.

இதற்கான நெறியாள்கையை திருமதி. ஜ.வினித்தா, திருமதி. பா.அ.சியாமளா, திரு. க.அருளானந்தகுமார் ஆகியோர் வழங்கியிருந்தனர். (04)



# அன்புவழிபுரத்தில் நூலக நடமாடும் சேவை



(ஹஸ்பர்)

திருகோணமலை நகரசபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக நடமாடும் சேவை திருகோணமலை அன்புவழிபுரம் நூலக மண்டபத்தில் நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் நேற்று (21) இடம் பெற்றது.

நிகழ்வில் நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் என்.பரமேஸ்வரன், நூலகர் மு.லெ. றிம்சான், அன்பு சனசமூக நிலையத்தின் பொறுப்பாளர்கள், நூலக உதவியாளர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

நடமாடும் சேவையில் நூலகக் கண்காட்சியும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு உதவிகள்

(கற்பிட்டி - எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி மஹ்தி ஸதகா பவுண்டேஷன் ஏற்பாட்டில் கற்பிட்டி ஆதார வைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவிற்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் எதிர் நோக்கும் சிரமங்களை கருத்தில் கொண்டு குடிநீர் மற்றும் கதிரை வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

கற்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் நூற்றுக் கணக்கான வெளி நோயாளிகள் மாதாந்த சிகிச்சைக்காக வருகைதரும்போது அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதனை கருத்தில் கொண்டு, கற்பிட்டி மஹ்தி ஸதகா பவுண்டேஷன் அமைப்பின் ஊடாக மாதாந்த சிகிச்சைக்காக வரும் வெளி நோயாளர்களின் நலன்கருதி, குடிநீர் மற்றும் கதிரை வசதிகளை வைத்தியசாலைக்குப் பெற்றுக் கொடுத்துள்ளதாக அமைப்பின் பணிப்பாளர் ஏ.ஆர். எம்.முசம்மில் தெரிவித்தார்.




# கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரியின் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு இடம்பெற்ற ஸஹிரியன் மாஸ்டர் சதுரங்க சம்பியன்சிப்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை சாஹிறா கல்லூரியின் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஸஹிரியன் மாஸ்டர் சதுரங்க சம்பியன்சிப் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

ஸாஹிறா தேசியக் கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரபல சமூக சேவையாளரும் தொழிலதிபரும் நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகருமான பொறியியலாளர் கலாநிதி உதுமான்கண்டு நாபீர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலிக்கும் உதவி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

# உளவுச் செயற்கைக்கோளை வெற்றிகரமாக நிலைநிறுத்தியதாக வடகொரியா அறிவிப்பு

தனது ராணுவ உளவுச் செயற்கைக்கோளான மலிங்யாங்-1 புவி வட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

கடந்த 2 முறை வடகொரியா ஏவிய இந்த உளவு ஏவுகணை முயற்சி தோல்வியடைந்தது. இந்நிலையில், மூன்றாவது முறையாக நேற்று இரவு உளவு ஏவுகணையான மலிங்யாங்-1 ஐ ஏவியதாகவும், அது புவி வட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாகவும் வடகொரியா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான ராணுவக் கூட்டணியால் அதிகரித்து வரும் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக உளவுச் செயற்கைக்கோளைச் செலுத்த இருப்பதாக வடகொரியா தெரிவித்திருந்தது.

அதன்படி, இதற்கு முன்பு இருமுறை செயற்கைக்கோளைச் செலுத்தும் முயற்சியில் வடகொரியா ஈடுபட்டது. ரொக்கெட்டில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக அந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

இந்நிலையில், மூன்றாவது முறையாக கடந்த ஒக்டோபரில் உளவுச் செயற்கைக்கோளைச் செலுத்த இருப்பதாக வடகொரியா தெரிவித்திருந்தது. ஆனால், எந்தக் காரணமும் தெரிவிக்கப்படாமல் அந்த முயற்சியைக் கைவிட்டது. இப்போது மீண்டும் உளவுச் செயற்கைக்கோளைச் செலுத்த இருப்பதாக அறிவித்துள்ளது.



வடகொரியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு செயற்கைக்கோளை ஏவும் திட்டத்தைக் கைவிடச் செய்யுமாறு தனது நாட்டு அதிகாரிகளுக்கு ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா உத்தரவிட்டிருந்தார்.

எந்தவிதமான செயற்கைக்கோள் சோதனையையும் வடகொரியா நடத்தக் கூடாது என ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏற்கெனவே தடை விதித்துள்ளது. தனது ஏவுகணைத் தொழில்நுட்பத்தின் மாறுபட்ட சோதனை வடிவமாக செயற்கைக்கோள் சோதனையை வடகொரியா கருதுவதால் இந்தத் தடையை ஐ.நா. பாதுகாப்புச் சபை விதித்துள்ளது.

தங்கள் நாட்டைக் கண்காணிக்கும் திறனை மேம்படுத்துவதற்காக வடகொரியா உளவு செயற்கைக்கோள் சோதனையை நடத்த திட்டமிடுகிறது என தென்கொரியா குற்றஞ்சாட்டியிருந்தது.

ஆயினும், பல்வேறுபட்ட தடைகளையும் தாண்டி, தனது ராணுவ உளவுச் செயற்கைக்கோளை புவி வட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தியுள்ளதாக இப்போது வடகொரியா தெரிவித்துள்ளது. (04)

## அக்கரைப்பற்று தொழிநுட்ப கல்லூரியில் இரத்ததானம்



(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக, அக்கரைப்பற்று தொழிநுட்பக் கல்லூரியின் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கிய நிகழ்வு கல்லூரி அதிபர் எம்.எம். ஹசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பதிவாளர் எம்.ஏ.சி.ரகீப் மற்றும் வைத்தியர்கள், தாதிமார்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கும் பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர் ஷகிப்

பங்களாதேஷில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பிரபல கிரிக்கெட் வீரர் ஷகிப் அல் ஹசன் போட்டியிடவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்காக கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் விளையாடி வரும் சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசன். சர்வதேச அளவில் பல சாதனைகளைப் படைத்து முன்னணி வீரராக உள்ளார்.

இவர் அடுத்தாண்டு ஜனவரி மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் அவமி லீக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார்.

பங்களாதேஷ் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான விண்ணப்பத்தை ஷகிப் அல் ஹசன் பெற்றுள்ளதாக அவமி லீக் கட்சியின் இணைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஷகிப் அல் ஹசனின் விண்ணப்பத்தை அவமி லீக் கட்சியின் நாடாளுமன்றக் குழு பரிசீலனை செய்த பிறகு போட்டியிடுவது உறுதி செய்யப்படும்.

ஷகிப் அல் ஹசனின் சொந்த ஊரான மகுரா, பங்களாதேஷ் தலைநகரான டாக்கா உள்ளிட்ட 3 தொகுதிகளில் அவர் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த நாடாளுமன்றத் தேர்தலை பிரதான எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பதாக அறிவித்துள்ள நிலையில், தொடர்ந்து நான்காவது முறையாக அவமி லீக் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. (04)






## முறிகண்டி மக்கள் சிரமதானப் பணி

வெள்ள அநர்த்தத்தைக் கட்டுப்படுத்தும் எதிர்பார்ப்புடன் முறிகண்டி மக்கள் இன்று சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

பிரதான வாய்க்கால்களில் காணப்படும் பற்றைகளினால் உக்கும், உக்காத பொருட்கள் அடைபட்டு வெள்ள நீர் மக்கள் குடியிருப்புகளிற்குள் புகுந்து வருகின்றது.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர் கொண்டு வரும்நிலை ஏற்பட்டதுடன், போக்குவரத்துச் செய்வதிலும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், முறிகண்டி வர்த்தகர் சங்கம், கிராம மட்ட அமைப்புக்கள் பொது மக்களுடன் இணைந்து மாபெரும் சிரமதானப் பணியை இன்று ஆரம்பித்துள்ளனர்.

இதன் போது, பிரதான வாய்க்கால்களில் காணப்பட்ட பற்றைகள் அகற்றப்பட்டுள்ளன. பெரும் தொகையான பிளாஸ்ரிக் போத்தல்கள் அகற்றப்பட்டு பிரதேச சபையினர் ஊடாக வெளியேற்றப்பட்டன.

வெள்ள நீர் தடையின்றி வாய்க்கால்கள் ஊடாக கடந்து செல்லும் வகையில் முன்னெடுக்கப்படும் குறித்த சிரமதானப்பணி காரணமாக வெள்ள அநர்த்தம் கட்டுப்படுத்தப்படும் என நம்பிக்கை வெளியிடப்படுகிறது. (02)

## மேலதிக வகுப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டது!

ஊவா மாகாணத்தில் மேலதிக வகுப்புக்கள் இன்று புதன்கிழமை (22) முதல் தடை செய்யப்பட்டுள்ளன.

ஊவா மாகாண பாடசாலைகளில் தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு கட்டணம் அறவிடப்படும் மேலதிக வகுப்புக்களே இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக ஆசிரியர்களால் நடத்தப்படும் கட்டணம் அறவிடப்படுகின்ற மேலதிக வகுப்புகளுக்கே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தடை உத்தரவைப் பின்பற்றாத ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## அன்புவழிபுரத்தில் நூலக நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

திருகோணமலை நகரசபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக நடமாடும் சேவை திருகோணமலை அன்புவழிபுரம் நூலக மண்டபத்தில் நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் நேற்று (21) இடம் பெற்றது.

நிகழ்வில் நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் என். பரமேஸ்வரன், நூலகர் மு.லெ. றிம்சான், அன்பு சனசமூக நிலையத்தின் பொறுப்பாளர்கள், நூலக உதவியாளர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

நடமாடும் சேவையில் நூலகக் கண்காட்சியும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள நினைவாலயத்தில் திறப்பு

மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர், மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் வாரம் நேற்று செவ்வாய்க்கிழமை (21) ஆரம்பமாகியுள்ளது.

இதனையொட்டி யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் நேற்று மாலை 6 மணியளவில் திறந்து வைக்கப்பட்டன.

இதன்பொழுது பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தாயாரான சிவபாதம் இந்திரவதி ஏற்றிவைத்து மலரஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன், யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் ஆகியோரும் மலரஞ்சலி செலுத்தினர்.








தொடர்ச்சியாக, சிறுவர் சிறுமியர்களால் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்லறைகள் திரைநீக்கம் செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

1982 கார்த்திகை 27 முதல் 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் கிடைக்கப்பெற முடிந்த 24,379 வீரர்களின் பெயர்களினை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கி நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகள், சிறுவர்கள், முன்னாள் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களை தண்டிப்பதற்கு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமியுங்கள்!


## ஊழல் எதிர்ப்புப் படையணி ஜனாதிபதியிடம் கோரிக்கை

நாட்டை வங்குரோத்து நிலைக்கு ஆளாக்கியதாக உச்ச நீதிமன்றத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நபர்களைத் தண்டிக்க முழு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஊழல் எதிர்ப்புப் படையணி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

மக்களிடமிருந்து பெறப்பட்ட வரிப்பணத்தில் நாட்டை வங்குரோத்து செய்த இவர்களுக்கு வழங்கப்படும் சகல சலுகைகளையும் இடைநிறுத்துமாறும் ஊழல் எதிர்ப்பு படை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், முன்னாள் ஜனாதிபதிகளான கோத்தபாய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், டபிள்யூ.டி. லக்ஷ்மன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி செயலாளர் மற்றும் நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர, முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் உட்பட அப்போதைய நிதிச் சபையும் இதற்கு பொறுப்புக் கூறுவதுடன், அவர்களை தண்டிக்க இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இவர்களுக்கு ஓய்வூதியம், உத்தியோகபூர்வ வாசஸ் தலங்கள், உத்தியோகபூர்வ வாகனம், பாதுகாப்பு உள்ளிட்ட கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் வழங்கப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும், பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து இரண்டு நிதி அமைச்சின் செயலாளர்கள் மற்றும் இரண்டு மத்திய வங்கி ஆளுநர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகளை இடைநிறுத்துமாறும் லஞ்ச ஊழல் ஒழிப்புப் படையணியின் தலைவர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் செயலாளர் நிரோஷன் பாதுக்க ஆகியோர் ஜனாதிபதியிடம் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். (ரெந-34)

# உத்தரதேவி புகையிரதத்துடன் மோதி முறுகண்டியில் யானையொன்று பலி



முல்லைத்தீவு முறுகண்டி புகையிரத நிலையத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி சுமார் 500 மீற்றர் தொலைவில் உத்தர தேவி புகையிரத்துடன் மோதுண்டு யானை ஒன்று பலியாகியுள்ளது.

இச் சம்பவம் நேற்று (21) மாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பய ணித்த குறித்த புகையிரதத்துடன் யானை மோதுண்டுள்ளது.

யானைகள் கடக்கும் இடம் - என்ற எச்சரிக்கை அறிவித்தல் காணப்படுகின்ற

பகுதியிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. (02)

# சுகாதார அமைச்சிலேயே அதிகமான குற்றவாளிகள் உள்ளனர்!

## மருத்துவத்துறை தொழிற்சங்கங்களின் ஒன்றியம் தெரிவிப்பு

இம்யூனோகுளோபுலின் வழங்கப்பட்ட எந்தவொரு நபரும் எச்.ஐ.வி, எய்ட்ஸ், கல்லீரல் அழற்சி (ஹெபடைடிஸ்) அல்லது பிற தொற்றாத நோய்களுக்கான பரிசோதனைக்கு இதுவரை உட்படுத்தப்படவில்லை என்று மருத்துவம் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான தொழிற்சங்கங்களின் ஒன்றியம் கூறுகின்றது.

இந்தச்சோதனைகளை மேற்கொள்வதற்கு குறித்த நபர்களை உட்படுத்தாமையின் மூலம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பாரிய தவறைச் செய்துள்ளார் என மேற்படி ஒன்றியத்தின் தலைவர் மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டுள்ளார்.

நன்கு பேர்போன பிரபலமான குற்றவாளிகளைவிட சுகாதார அமைச்சில் அதிகமான குற்றவாளிகள் உள்ளனர் என்பதை இந்த இம்யூனோகுளோபுலின்




மோசடி உணர்த்துகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தவிர, சுகாதார அமைச்சின் 11 அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விமானப் பயணத்தடையை பெற்றுள்ளதாகவும் மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ மேலும் தெரிவித்தார். (ரெந-38)


JRIDE
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
BOOK
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358